மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ம் நாள் வியாழக்கிழமை

*******

திரு.ரெ.செந்தில்குமார், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | ராஜா | **அசல் வழக்கு எண்.** | - | 1/2024 |
| த/பெ. | - | பச்சையப்பன் | **வா.சா.** | - | 1 |
| வயது | - | 49 | | | |
| கிராமம் | - | சித்தலிங்கமடம் | | | |
| வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் | | | |
| தொழில் | - | விவசாயம் | | | |

**31.10.2025.**

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 3 ம் பிரதிவாதியை இந்த வழக்கில் எதற்காக சேர்த்துள்ளேன் என்றால் சக்குபந்தி ஒரு இடம், எங்க இடத்தின் சர்வே எண்ணை போட்டு ரிஜிஸ்டர் செய்துவிட்டார்கள். இந்த தகவலை சொல்வதற்காக சேர்த்துள்ளோம். சார்பதிவாளரை இந்த வழக்கில் சேர்த்துள்ள நிலையில், அவருடைய மேல் அதிகாரிகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

2. இந்த வழக்கில் அரசு அதிகாரிகள் மீது வழக்கு தொடர்வதற்கு முன்பாக அறிவிப்பு அனுப்பாததாலும், அவ்வாறு அறிவிப்பு அனுப்பாததற்காக தனியாக மனு தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைத்நிறுத்தக்கது அல்ல, தள்ளுபடிக்குரியது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை.

3. 1, 2 பிரதிவாதிகள் மீது நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் கொடுத்த புகாரில் அவர்கள் நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ள சொல்லிவிட்டார்கள். 1, 2 பிரதிவாதிகள் 2011 ல் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் எனக்கு 2020 ல் தான் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அப்பா இறந்தபிறகு நிலம் விற்க போனோம் அப்போது தான் தெரியும்.

4. தகவல் தெரிந்திருந்து உடனடியாக வழக்கு தாக்கல் செய்யாமல் 8 மாதம் காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்திருந்தேன். பாகப்பத்திரத்தில் 1, 2 பிரதிவாதிகள் எனக்கு சொந்தமான சர்வே நெம்பரை போட்டு எழுதியுள்ளதாக சொல்கிறேனே அந்த விவரத்தை தாவாவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் என்னுடைய சர்வே நெம்பரை மட்டும் போட்டுள்ளார்கள், அளவு தெரியவில்லை.

5. 1, 2 பிரதிவாதிகளின் பாகப்பத்திரத்தை இந்த வழக்கில் போட்டுள்ளேனா என்றால் ஆமாம். எனக்கு பாத்தியமான சர்வே நெம்பரை 1, 2 பிரதிவாதிகள் பாகப்பத்திரத்தில் கூறியுள்ளதை நீக்க கோரி எதாவது மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை என்றுமுதலில் சாட்சி சொல்லிவிட்டு, விழுப்புரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு கொடுத்தேன், அவர்கள் கோர்டில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அந்த மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அவ்வாறு மனு எதுவும் கொடுக்கவில்லை என்றும், இந்த வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

(Sd/-R.SenthilKumar)
D.M-cum-JM.
T.V.Nallur.